# ரிட்டிஷ் தூதுகோஷ்டி

# ருவது என்ன?

சுதந்திரமல்ல

ஜனநாயகமல்ல

சுயநிர்ணய உரிமையுமல்ல.

பிரசுராலயம்

V2:5
N46
761

## பிரிட்டிஷ் தூதுகோஷ்டி

# தருவது என்ன?

★ சுதந்திரமல்ல

★ ஜனநாயகமல்ல

★ சுயநிர்ணய உரிமையுமல்ல

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி,
தமிழ்நாடு கமிட்டி
1/6, டேவிட்ஸன் தெரு,
ஜி. டி., சென்னை.

10-5-1946] [விலை 2 அணா

# பொருளடக்கம்

பக்கம்

1. கம்யூனிஸ்டு யாத்தாஸ்தும் தூதுகோஷ்டியும் ... 3
(டாக்டர் ஜி. அதிகாரி)

2. ஏகாதிபத்ய சதி ... ... ... 11

3. கம்யூனிஸ்டு யாதாஸ்து ... ... ... 23
(பி. ஸி. ஜோஷி)

Janasakthi Publishing House Q. H. M, S. 402

Printed at the Janasakti Press Q. H. M. S. 374

Date of Printing: 13th May, 1946.

# கம்யூனிஸ்டு யாதாஸ்தும் தூதுகோஷ்டியும்

*[ஏப்ரல் 28-ந் தேதி "பீப்ள்ஸ் ஏஜ்" பத்திரிகையில் கம்யூனிஸ்டு தலைவர்களில் ஒருவரான தோழர் டாக்டர் ஜி. அதிகாரி எழுதிய கட்டுரை: இதை எழுதும்போது தூதுகோஷ்டியினர் காஷ்மீரத்திற்குச் சென்றிருந்தனர்.*

*தூதுகோஷ்டியுடன் தலைவர்கள் நடத்திய தனித்தனி சம்பாஷணையில் முட்டுக்கட்டை ஏற்பட்டுவிட்டதாக கூறப்பட்டது. இந்தியப் பிரச்னையை எப்படி தீர்ப்பது என்று டாக்டர் ஜி. அதிகாரி ஒரு வழியை இக்கட்டுரையில் காட்டினர்.]*

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அந்தரங்கசுத்தியை ஸ்தாபிப்பதற்கு தெளிவான பாஷையில் ஆணித்தரமாக அறைகூவியழைக்கிறது மந்திரிகள் தூதுகோஷ்டிக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சி சமர்ப்பித்திருக்கும் யாதாஸ்து. "தொழிற்கட்சி மந்திரிசபை டோரி கட்சிக் கொள்கைப்படி நடக்க விரும்பவில்லை. உறுதியாக இந்திய அரசியல் கட்சிகளின் வேற்றுமையை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்வதற்கு இஷ்டப்படவில்லை. சுதந்திர இந்தியாவுடன் ஒரு முடிவுக்கு வருவதில் அக்கரைகொண்டிருக்கிறது" என்றால் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முதன்முதல் வேலையாக இந்திய சுதந்திரத்தை சந்தேகமற பிரகடனப்படுத்தவும், பிரிட்டிஷ் ராணுவத்தை இந்தியாவிலிருந்து வாபஸ் வாங்கவும் தடை என்ன இருக்கமுடியும்?

தனித்தனியாக, ஒருவர்பின் ஒருவராகச்சென்று பேட்டி கண்டு பேசவேண்டிய அவமானம் ஏற்பட்டிருக்காது, பொதுஜன ஆதரவு கொண்டுள்ள அரசியல் கட்சிகள் அமர்ந்த இடைக்கால அரசாங்கத்திற்கும், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் உண்மையான சமரசப் பேச்சு நிகழ்ந்திருக்கவேண்டும்.

இந்தியர்கள் அனைவரும் ஒருமுகமாக கேட்கும்படியான காரியம், இந்திய சுதந்திரத்திற்கு நெருங்கிய ஒரு தேதி குறிப்பிட்டு திட்டவட்டமாகப் பிரகடனம் செய்வது, பிரிட்டிஷ் ராணுவத்தை இந்நாட்டிலிருந்து எடுத்துச் செல்வது, எந்த நிமிஷம் நடைபெறுகிறதோ அதே க்ஷணத்தில் சகல பிரச்னைகளைப்பற்றியும் சரியான நிர்ணயம் பிறக்கும்; பொதுஜன ஆதரவுபெற்ற அரசியல் கட்சிகள்கூடி இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்குப் பக்குவமான சூழ்நிலை ஏற்படும்.

கம்யூனிஸ்டு கட்சியின் யாதாஸ்தில் எவ்விதமான சந்தேகத்திற்கும் இடம் வைக்கவில்லை. காங்கிரஸுக்கும், லீகிற்கும் தற்காலிக அரசாங்கம் அமைப்பதுபற்றியோ அல்லது அரசியல் நிர்ணய சபை கூட்டுவதுபற்றியோ அபிப்பிராய பேதமிருக்கிறது, ஆதலால் அதிகாரத்தை இந்தியருக்கு மாற்றமுடியாது என்று கட்சி பேதத்தை ஒரு சாக்காகக் காட்டக்கூடாது என்கிறது எங்கள் யாதாஸ்து.

காங்கிரஸ் லீக் வேற்றுமையை காரணமாகக் காட்டாமல் அதிகாரத்தை பரிபூரணமாக இந்தியா வசம் ஒப்படைத்து விடுவது என்ற முடிவுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் வந்துவிட்டால் அதற்குபின் காங்கிரஸுக்கும் லீகுக்கும் இரண்டே மார்க்கங்கள் தானிருக்கும். ஒன்று கொள்கை வித்தியாசங்களை தீர்த்துக் கொள்வதற்கு உள்நாட்டுச் சண்டையில் இறங்கவேண்டும். அல்லது சிறுபான்மையோர்களுக்கு உரித்தான பிரதிநிதித்வமும். காங்கிரஸுக்கும் லீகுக்கும் சம பிரதிநிதித்வம் கொடுத்து இடைக்கால அரசாங்கம் ஏற்படுத்துவது என்றும், தம்தம் தனி லட்சியங்களை ஜனங்கள் முன்பு வைத்து நியாயமான ஜனநாயகமான முறையில் ஓட் எடுத்து, அதன்மூலம் தங்கள் கொள்கை வேறுபாட்டைத் தீர்த்துக் கொள்வது என்றும் ஒத்த முடிவிற்கு வர வேண்டும்.

இந்திய சுதந்திரத்தை பிரகடனம் செய்து, பிரிட்டிஷ் ராணுவத்தைவாபஸ்வாங்குவதென்று அறிவித்து, அதை உடனடி அமுல் நடத்த பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு நேர்மையிருக்குமானால் உள்நாட்டுச் சண்டை என்ற பேச்சுக்கே இடமிருக்காது என்பது கம்யூனிஸ்டு கட்சியின் துணிவு.

இம்மாதிரி பிரகடனம் செய்துவிட்டால் அப்புறம் ஒரு கட்சி, மற்ற கட்சி பிரிட்டிஷாருடன் சேர்ந்துகொண்டு தனது நோக்கங்களை தோற்கடிக்க முயற்சிப்பதாக சந்தேகப்படுவதற்கு இடமிருக்காது.

உதாரணமாக முஸ்லிம் லீக் பிரிட்டிஷாருடன் சேர்ந்து கொண்டு இந்திய சுதந்திரம் உருவாகாமல் உலை வைப்பதற்கு சதி

செய்கிறது என்று காங்கிரஸ் சந்தேகங்கொள்வதற்கு ஆதாரமிருக்காது.

அதைப்போலவே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஒத்தாசையைக் கொண்டு ஒரு மத்ய அரசாங்கம் அமைப்பதற்கு காங்கிரஸ் பிரயத்தனப் படுகிறது, அதனால் லீக் கோரும் சுய நிர்ணய உரிமை மறுக்கப்படும் என்று முஸ்லிம் லீக் சந்தேகங் கொள்வதற்கு ஆதாரமிருக்காது.

பரஸ்பர சந்தேகத்திற்கு பதிலாக இரு சாராருக்கும் பொதுவான அவசர அவசியமான பிரச்னைகளில் கவனம் செலுத்தும்படி இரு கட்சியினரையும் அவற்றை பின்பற்றும் மக்கள் வற்புறுத்துவார்கள். உணவுப்பொருள் இறக்குமதி செய்வதற்கும், உடனடி தேவையாகவிருக்கும் இயந்திரங்களை வரவழைக்கவும், பிரிட்டிஷாரிடமிருந்து ஸ்டர்லிங் கடனை வசூலிக்கவும், பஞ்சம். வேலையில்லாத் திண்டாட்டம், தேவைப் பொருள்களுக்குத் தட்டு முதலிய நெருக்கடிகளை சமாளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவும் இரு கட்சியும்கூடி இடைக்கால அரசாங்கம் நிறுவி, பிரிட்டிஷ் அரசாங்கத்தோடும், இதர அரசாங்கங்களோடும் பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டு மென்று இரு கட்சியையும் ஆதரித்து நிற்கும் பொதுமக்கள் இரு கட்சியையும் நிர்ப்பந்திப்பார்கள்.

அத்துடன் இரு கட்சியையும் பிரித்து வைத்திருக்கும் சிக்கலான பிரச்னை ஒரு இந்தியாவா அல்லது பாகிஸ்தானா வென்பதை ஜனநாயகமுறையில் ஜனங்களின் முன்புவைத்து நியாயமான முடிவுக்கு வருவதற்கு இடைக்கால சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் பொதுமக்கள் வற்புறுத்துவார்கள்.

ஆனால் இன்றைய போக்கைப் பார்த்தால் அரசியல் கட்சிகள் தம் தம் கொள்கைகளை ஜனங்கள் முன்வைத்து தங்களுக்குள்ளேயுள்ள வேற்றுமைகளை தீர்த்துக்கொள்வதற்கு ஏதுவாக அதிகாரத்தை இந்தியருக்கு மாற்றவேண்டு மென்பது தூதுகோஷ்டியின் எண்ணமல்ல.

அதற்கு மாருக குளிமை நிறைந்த காஷ்மீரத்தில் உட்கார்ந்து, தங்களிடம் காங்கிரஸும் லீகும் முறையே சமர்ப்பித்துள்ள ஒன்றுக்கு ஒன்று முரணான தனி லட்சியங்களின் காரணமாய் எழுந்துள்ள ஸ்தம்பிப்பைத் தீர்ப்பதற்காக சுதேச மன்னர்களையும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தையும் நிலை நாட்டக் கூடியதொரு சமரசத் திட்டத்தை மந்திரிகள் தூதுகோஷ்டியினர் தயாரித்துக்கொண்டிருக்கிருர்கள்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி தயாரித்துள்ள காங்கிரஸ் திட்டத்தை ஏப்ரல் 15-ம் தேதி அபுல்கலாம் ஆஸாத் தனது அறிக்கையில் வெளியிட்டார். அதன் அம்சங்களாவன:—

(1) பரிபூர்ண சுதந்திரம்.

(2) ஐக்ய இந்தியா.

(3) மாகாண சுயாட்சி; மாகாணங்கள் வசம் விட்டுப்போன அதிகாரங்கள்; ஒரு சமஷ்டி.

(4) மத்ய அரசாங்க விவகாரங்களுக்கு இரண்டு ஜாபிதாக்கள்—ஒன்று மத்ய அரசாங்கத்திற்கு கட்டாயம் உட்பட்டிருப்பவை; இரண்டாவது மாகாணங்கள் விரும்பினால் மத்ய அரசாங்கத்தினிடம் ஒப்படைக்கும் விவகாரங்கள்.

முஸ்லிம்களை பெருவாரியாகக்கொண்ட மாகாணங்கள் தங்கள் அதிகாரத்தை விரிவுபடுத்திக் கொள்வதற்கு சந்தர்ப்பமளிக்கும் பொருட்டே மேலே காணும் நான்காவது அம்சம் அபுல்கலாம் ஆஸாதின் வற்புறுத்தலின்பேரில் சேர்க்கப்பட்டது. ஏனெனில் இதன்படி 'கட்டாயம்' என்று பாகுபாடு செய்யப்பட்ட விவகாரங்கள் சம்பந்தபட்ட மட்டும்தான் அம் மாகாணங்கள் மத்ய அரசாங்கத்திற்கு உட்பட்டு நடக்கவேண்டி யிருக்கும்.

அதாவது இந்தியா முழுமைக்கும் ஒரு அரசியல் நிர்ணய சபை. இதற்கு முஸ்லிம்கள் மெஜாரிட்டியாக விருக்கும் மாகாணங்களும் உட்பட்டவை; அப்பகுதி மக்களுக்கு சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவில்லை. அவர்கள தங்களுக்கு என சுதந்திரமான தனி அரசாங்கங்கள் அமைத்துக்கொள்ள உரிமை கொடுக்கப்படவில்லை. இதுவே காங்கிரஸ் திட்டத்தின் சாராம்சம்.

இத்திட்டத்திற்கு எதிர்ப்பாக முஸ்லிம் லீக், வட கிழக்கில் வங்காளமும் அஸ்ஸாமும் வடமேற்கில் எல்லைப்புற மாகாணம், பலுசிஸ்தானம், பஞ்சாப், சிந்து முதலிய மாகாணங்களையும் சேர்த்து பரிபூர்ண அரசுரிமைகொண்ட தனி அரசாங்கம் அமைக்கவேண்டுமென்று கோருகிறது. இத்திட்டத்தை லீக் சட்ட சபை அங்கத்தினர் மகாநாட்டில் நிறைவேற்றினார்கள். பாகிஸ்தான் மக்கள் ஒரு அரசியல் நிர்ணய சபையும், ஹிந்துஸ்தான் மக்கள் ஒரு அரசியல் நிர்ணய சபையுமாக இரண்டு அரசியல் நிர்ணய சபைகள் கூட்டவேண்டு மென்று லீக் கேட்கிறது.

முஸ்லிம்கள் ஒரு தனித்த தேசிய இனம் என்னும் பிரித்துப் பேசும் கோட்பாட்டின்படி இயற்கைக்கு ஒவ்வாத வகையில் இந்தியாவை கூறுபோட வேண்டுமென்பது முஸ்லிம் லீகின் லட்சியம். இது நியாயமான கோரிக்கை ஆகாது. ஏனெனில் இந்தக் கோட்

பாட்டின்படி பல்வேறு தேசிய இனங்களான சீக்கியர் உள்பட மத்ய பஞ்சாபி மக்களுக்கும், பட்டானியர்களுக்கும், பலூசிகளுக்கும், சிந்தியர்களுக்கும், வங்காளிகளுக்கும், அஸ்ஸாமியர்களுக்கும் சுய நிர்ணய உரிமை மறுக்கப்படுகிறது.

அஸ்ஸாம், வங்காளம், எல்லைப்புற மாகாணம் போன்ற பொதுவான பாஷை கலாசாரம்கொண்ட பிரதேசங்களில்வாழும் மக்களின் விருப்பத்தை கேட்காமல் ஆறு மாகாணங்களுக்கு தனி அரசாங்கம், ஒரு அரசியல் நிர்ணய சபை என்று முஸ்லிம் லீக் கேட்பது அங்கிகரிக்க முடியாததொன்று. ஏனெனில் அந்த ஆறு மாகாணங்களில் வாழும் மக்களுக்கும் சுய நிர்ணய உரிமை பிறப்புரிமை.

பொதுவான பாஷை கலாசாரம் உள்ள பிரதேசங்களுக்கு சுயாட்சிமட்டும் அளித்து, இந்தியா பூராவுக்கும் ஒரே சமஷ்டி, ஒரே அரசியல் நிர்ணயசபை என்று கூறும் காங்கிரஸ் திட்டமும் ஜனநாயகத்திற்கு முரணானது. ஏனெனில் தேசீய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை, விரும்பினால் பிரிந்துபோகும் உரிமை இத் திட்டத்தில் கொடுக்கப்படவில்லை.

பலூசியர்கள் சிந்தியர்களைப்போல் பல தேசீய இனங்கள் பெருவாரியாக முஸ்லிம் மதத்தை தழுவுபவர்கள் கூடி இந்திய யூனியனிலிருந்து பிரிந்துபோய் தனியாக தங்களுக்குள் ஒரு சமஷ்டி அமைத்துக்கொள்ள வேண்டுமென்று பொதுஜன வாக்குகள் மூலம் தெரிவித்தால், அவர்கள் தனி அரசாங்கம் நிர்மாணிப்பதற்கு அனுமதிக்கப்படவேண்டும்.

பிரிந்துபோகக்கூடாது, ஒரே சமஷ்டி அல்லது யூனியன்கீழ் சேர்ந்து வாழவேண்டுமென்று அம்மக்களின் மனத்தை திருப்புவதற்கு நமக்கு உரிமையுண்டு. ஆனால் அந்த மனமாற்றம் அவர்களுக்கு சுய நிர்ணய உரிமையை மறுப்பதினால் வராது. அப் பிரதேசங்களில் மிராசுதார்களை எதிர்த்து ஜனநாயக உரிமைகளுக்கு பொதுஜன இயக்கங்களை வளர்ப்பதின் மூலம்தான் இதர மக்களுக்கும் அவர்களுக்குமுள்ள பொதுவான பந்தங்களை உணர்த்தமுடியும். மனமாற்றத்தை சாத்யமாக்கும் வழி இதுவே.

காங்கிரஸிற்கும் லீகிற்கும் வேற்றுமை யிருப்பதினால் இருவரும் ஏற்றுக் கொள்ளக்கூடியதொரு பொதுத்திட்டத்தை தயாரிப்பதில் மந்திரிகள் தூதுகோஷ்டி வெற்றி காணவில்லை. அவர்கள் கொடுத்த இரண்டு பொதுவான சமரச யோசனைகளும் பாகிஸ்தான் ஹிந்துஸ்தான் என இரு சமஷ்டிகள், இரண்டிற்கும் சுயாட்சி, இரண்டிற்கும் மேல் ஒப்புக்கு அமைந்த ஒரு மத்ய அரசாங்கம். அதில் இரண்டிற்கும் சம பிரதிநிதித்வம் என்ற முக்ய அம்சங்களைக் கொண்டிருந்தன.

இரு சமஷ்டிக்கும் பொதுவான மத்ய அரசாங்கத்தில் மன்னர்களையும் சேர்த்துக்கொண்டு, இந்தியாவைப் பூராவும் பிரிட்டிஷார் ஆதிக்கம் செலுத்துவதற்கு உகந்த முறையில் தயாரிக்கப்பட்ட உபாயம்தான் தூதுகோஷ்டியின் சமரச யோசனை.

காங்கிரஸ் லீக் இரண்டுமே மந்திரிகளின் சமரச திட்டத்தை நிராகரித்து விட்டதாக செய்திகள் வந்திருக்கின்றன.

இங்ஙனம் மந்திரிகளின் இரு சமரசத் திட்டங்களும் ஏற்றுக் கொள்ளப்படாவிடில். இன்றுள்ள மாகாண மந்திரிசபைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஒரு தற்காலிக அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வார்கள் என்று சில வட்டாரங்களில் சொல்லப்படுகிறது. சுதந்திர இந்தியாவின் அரசியல் அமைப்பைபற்றி முடிவுசெய்ய மாட்டார்கள். அது ஒத்திப்போடப்படும்.

நெருக்கடியான இந்நிலைமையில் காங்கிரஸும் லீகும் ஒருவரை எதிர்த்து ஒருவர் பிரிட்டிஷாரிடம் விண்ணப்பித்துக்கொள்கிறார்கள்.

இந்த முட்டுக்கட்டையை குறித்து சர்தார் வல்லபாய்படேல், மாகாண மந்திரி சபைகளின் பிரதிநிதிகளைக்கொண்டு ஒரு தற்காலிக அரசாங்கத்தை அமைக்கும்படி யோசனை கூறுகிறார். அதைச் செய்துவிட்டால் வகுப்புப் பிரச்னை தானாகவே தீர்ந்துவிடும் என்று அபிப்பிராயப்படுகிறார். இம்மாதிரி தற்காலிக அரசாங்கம் ஏற்பட்டு, அதற்கும் மாகாண அரசாங்கங்களுக்கும் பரஸ்பரம் சுமூகமான நல்லுறவு ஏற்பட்டு சச்சரவின்றி நிர்வகிக்கத் தொடங்கினால் தேசத்தில் பிரமாதமான நெருக்கடிகள் ஒன்றும் வராது என்று எண்ணுகிறார்.

காங்கிரஸும் லீகும் பாம்பும் கீரியும்போல் ஒருவருக்கு ஒருவர் பகைத்து நிற்கவும், அதே காலத்தில் நெருக்கடியைத் தீர்க்க பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடமிருந்து வழி பிறக்குமென்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பதைப் பார்த்தால் தூதுகோஷ்டி கொடுத்த யோசனைப்படியே காங்கிரஸ் பெருவாரியாக விருக்கும் மாகாண மந்திரி சபைகளின் அடிப்படையில் ஒரு தாற்காலிக அரசாங்கம் ஏற்படலாம் என்று தோன்றுகிறது.

ஆனால் இந்த தாற்காலிக அரசாங்கம் யதார்த்தத்தில் அதிகாரத்தை இந்தியர்களுக்கு மாற்றியது ஆகாது. அமெரியும் வேவலும் சென்ற செப்டம்பர் மாதம் அளித்த வைஸ்ராயின் நிர்வாகக் கமிட்டியாகத்தானிருக்கும், இந்த நிர்வாகக் கமிட்டி பிரிட்டிஷ் ராணுவத்தை நம்பியிருக்கும்; ஜனங்களின் அதிருப்தி, வகுப்புக் கலகத்திற்கு மத்தியில் தற்காலிக அரசாங்கம் நாட்டை நிர்வகிக்க வேண்டியிருக்கும்.

மந்திரிகள் தூதுகோஷ்டி நடத்தும் நாடகத்தின் கடைசிப் பகுதி இது. ஈஸ்டர் விடுமுறை முடிந்ததும் திரைவிழும்; கடைசி சீன் நடிக்கப்படும். இங்ஙனம் அமெரி அளித்த நிர்வாக சபைக்கு வந்து முடிந்திருப்பதற்குக் காரணம் தூதுகோஷ்டியினர் இந்திய சுதந்திரத்தை அங்கீகரித்து பிரகடனப் படுத்தவும் பிரிட்டிஷ் ராணுவத்தை வாபஸ்வாங்கவும், அதிகாரத்தை உண்மையில் இந்தியருக்கு மாற்றவும் மறுப்பதுதான்.

தூது கோஷ்டியின் இப்போக்கு காங்கிரஸையும், லீகையும் மேலும் மேலும் ஒருவருக்கு விரோதமாக மற்றவர் தந்திரங்களை கையாள்வதற்கே தூண்டி விடுகிறது. அதன்மூலம் மத்யஸ்தத்தை பிரிட்டிஷாருக்கு விட்டுவிடுகின்றனர்; யதேச்சாதிகாரமாக பிற்போக்கான திட்டத்தை பிரிட்டிஷார் பார்த்து நம்மீது திணிப்பதற்கு வசதிகொடுத்து வருகின்றனர்.

தூதுகோஷ்டிக்கு கம்யூனிஸ்டு கட்சி சமர்ப்பித்த யாதாஸ்து இந்த நெருக்கடியிலிருந்து தப்புவதற்கு அனுபவசாத்யமான திட்டத்தைக் கொடுக்கிறது. இந்திய சுதந்திரத்தை அங்கீகரித்து பிரகடனம் செய்ய வேண்டுமென்றும், பிரிட்டிஷ் ராணுவத்தை இந்தியாவிலிருந்து வாபஸ் பெற வேண்டுமென்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்பதோடு, காங்கிரஸ் லீகும் தங்கள் வேறுபாடுகளை ஜனங்களிடத்தில் வைத்து ஜனநாயக முறையில் நியாயமான வழியில் முடிவு எடுப்பதன்மூலம் தீர்த்துக்கொள்வதற்கும், அதன்பேரில் பிரிட்டிஷ் ராணுவத்தை வாபஸ் பெறும்படியும், இந்தியாவின் முழுமைக்கும் சுதந்திரத்தை அங்கீகரிக்கும்படியும் பிரிட்டிஷ் அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்கு கூட்டுமுன்னணியை சிருஷ்டிப்பதற்கும் இன்றியமையாத காங்கிரஸ்-லீக் சமரசத்திற்கு ஒரு திட்டத்தை எங்கள் யாதாஸ்து அளிக்கிறது.

காங்கிரஸுக்கும் லீகுக்கும் சம பிரதிநிதித்வம் கொடுத்து ஒரு இடைக்கால சர்க்கார் அமைத்து அதற்கு அதிகாரத்தை மாற்றுவது உசிதம் என்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஆனால் அதிகாரம் பரிபூர்ணமாக மாற்றப்படவேண்டும்.

மேற்கூறியவாறு இருகட்சியும் கூடிய இடைக்கால அரசாங்கத்தினிடம் அதிகாரத்தை மாற்றாமல் எந்த ஒரு கட்சிக்கு அதிகாரம் மாற்றினாலும் அதையும் நாங்கள் ஆதரிப்போம். ஆனால் அப்படி அதிகாரத்தை வகிக்கவரும் கட்சி அதிகாரத்தை மற்ற கட்சிக்கு விரோதமாகப் பிரயோகிக்காமல், வயதுவந்த ஆண் பெண்களுக்கு ஓட் உரிமை வழங்கி, பொதுவான பாஷை கலாசாரமுள்ள பிரதேசங்களுக்குக் கூடியவரையில் தேசீய இன அடிப்படையில் முறைப்படி மாகாண எல்லைகளை திருத்தியமைத்து, அத்தேசீய இனங்களின் சுய நிர்ணய உரிமையை

அங்கீகரித்து, இவற்றின் அடிப்படையில் அரசியல் நிர்ணய சபை அமைப்பதற்கு அதிகாரத்தை உபயோகிப்பதனல் மாத்திரமே ஒருகட்சிக்குமட்டும் அதிகாரம் மாற்றப்படுவதை நாங்கள் ஆதரிப்போம்.

ஒரு அரசியல் நிர்ணயசபை கூட்டுவதா அல்லது பல அரசியல் நிர்ணய சபைகள் கூட்டவேண்டுமா என்ற பிரச்னையை இந்த வழியில்தான் முடிவு கட்டுவது சாத்யமாகும். முஸ்லிம்கள் மெஜாரிட்டியாக வாழும் பிரதேசங்களில் உள்ள மக்கள் தேசீய இனவாரியாகத் தனித்தனியே தாங்கள்மட்டும் கூடி ஒரு தனி சமஷ்டி அமைத்துக் கொள்வதென முடிவு செய்வதற்குச் சுதந்திரம் உண்டு.

தொழிலாளிகள் உழைப்பாளிகள் கட்சியாக விளங்கும் கம்யூனிஸ்டு கட்சி, பரிபூர்ண அரசுரிமைபெற்ற தேசீய இனங்கள் ஒன்றுசேர்ந்து நிர்மாணிக்கும் ஒரு இந்திய யூனியனை ஆதரிக்கும். ஏனெனில் சகல தேசீய இனங்களைச் சார்ந்த பாமரமக்களின் நலன்களை பாதுகாப்பதற்கு மிராசுதாரர் முறையை எதிர்த்து நடத்தும் போராட்டத்திலும் இந்தியாவின் பொருளாதார புனருத்தாரணத்திலும் சகல தேசீய இனங்களும் ஒன்றுபட்டு நிற்பது அவசியமாகிறது.

◎ சுதந்திரமுமல்ல

◎ ஜனநாயகமுமல்ல

◎ சுயநிர்ணய உரிமையுமல்ல

# ஏகாதிபத்ய சதி

[12-5-46 *"பீப்பிள்ஸ் ஏஜ்"* இதழில் பி. ஸி. ஜோஷி *எழுதிய கட்டுரை. பிரிட்டிஷாரின் திட்டம் அமுலுக்கு வந்தால் இந்தியா எவ்விதமிருக்கும் என்பதைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.*]

சிம்லா மகாநாடு ஜெயிக்குமா தோற்குமா என்பதே ஒவ்வொருவரும் கேட்கின்ற கேள்வி. இந்த கட்டுரை அச்சிட்டு வெளி வருவதற்கு முன்பே இந்தக் கேள்விக்கு ஒரு வேளை பதில் தெரிந்தாலும் தெரிந்துவிடக்கூடும்.

நிலைமை மிகவும் நெருக்கடியாக இருக்கிறது என்று தலைவர்களும், நிருபர்களும் அபிப்பிராயத்தை வெளியிடலாம். ஆனால் "நம்பிக்கை இல்லாமலில்லை" என்றும் கூறுவார்கள். ஒருவருடைய நம்பிக்கைகளையும், பயத்தையும் வைத்துக்கொண்டு நிலைமையை ஆராய்ந்து பார்த்து முடிவிற்கு வருவதல்ல நம் நோக்கம்,

## என்ன இது?

சாட்டை தூதுகோஷ்டியின் கையிலிருக்கிறது. அதனுடைய முன் முயற்சியினலேயே மகாநாடு கூட்டப்பட்டிருக்கிறது. நிகழ்ச்சி நிரலையும் அதுவே தயாரித்துக் கொடுத்திருக்கிறது. விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்காக அது தயாரித்துக் கொடுத்திருக்கும் திட்டத்திலிருந்தே, அது எவ்விதம் இந்திய மக்களின் தலைவிதியை உருவாக்க நினைக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது- அதைக் கொஞ்சம் நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

முதலாவதாக, அந்நியநாட்டு விவகாரங்கள், செய்திப்போக்குவரத்துகள், தேசப் பாதுகாப்பு ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக யூனியன் சர்க்காரின் மத்திய நிர்வாகம் ஒன்றை நிறுவவேண்டுமென்று அது யோசனை கூறியிருக்கிறது.

இரண்டாவதாக, இரண்டு கோஷ்டிகளாக மாகாணங்களைப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. பெருவாரியான ஹிந்துக்களைக்கொண்ட மாகாணங்களை ஒரு கோஷ்டியாகவும், பெருவாரியான முஸ்லிம்களைக்கொண்ட மாகாணங்களை இன்னொரு கோஷ்டியாகவும் பிரிக்கவேண்டுமென்கிறது. இந்த இரண்டு மாகாணக் கோஷ்டிகளிலுமுள்ள மாகாணங்கள் எதையெதையெல்லாம் தங்களுக்குள் பொதுவாக நிர்வகிக்க வேண்டுமென்று விரும்புகின்றனவோ, அவற்றைத் தவிர மற்ற விவகாரங்களையெல்லாம் மாகாண கோஷ்டிகள் நிர்வகிக்கும் என்று கூறப்படுகிறது.

மூன்றாவதாக, சட்ட திட்டங்களில் விடுபட்டுப்போகும் சகல அதிகாரங்களையும், பரிபூரண அரசாட்சி உரிமைகளையும் கொண்டு, சகல விவகாரங்களையும் நிர்வகிக்கும்படியான மாகாண சர்க்கார்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்கிறது.

நான்காவதாக, சுதேச சமஸ்தானாதிபதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி இருவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிற நிபந்தனைகளின் அடிப்படையில், இந்த அமைப்பில் தங்களுக்குத் தகுந்த ஸ்தானத்தை சமஸ்தானாதிபதிகள் பெறுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

## நடு வழியில் அல்ல

சட்ட திட்ட நுணுக்கங்களில் புகுந்து நம் வழியை நாம் தவறி விடாமல், நம் தேசத்தின் சுதந்திரத்தையும், நம் மக்களின் எதிர் காலத்தையும் பொறுத்தவரையில் இந்தத் திட்டங்களுக்கு என்ன அர்த்தம் என்பதை முதலில் நாம் புரிந்துகொள்வோம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதியின் சூழ்ச்சி மிகவும் சர்வ சாதாரணமானது. இந்தியாவின் ஐக்கியத் தன்மையைப்பற்றி மந்திரி சபையின் தூது கோஷ்டி முதலில் பேச ஆரம்பித்தது; லீகிற்கு விரோதமாகக் காங்கிரஸுடன் அது ஒரு உடன்பாட்டிற்கு வந்துவிடும் என்ற நம்பிக்கையை மிகமிக அதிகமாகக் காங்கிரஸ் வட்டாரங்களுக்குக் கொடுத்தது. பேச்சு வார்த்தைகளின் இரண்டாவது கட்டத்தில், அவர்கள் எதிர்பக்கமாக ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தார்கள். லீகின் கோரிக்கையை முழுவதும் நிராகரிக்க முடியாது என்றும், முஸ்லிம்களின் மனதிலுள்ள உண்மையான பீதிகளையும், அபிலாஷைகளையும் கவனித்துப் பரிகாரம் தேடவேண்டும் என்றும், இன்னும் இதுபோல பலவிதமாக அவர்கள் பேசத் தொடங்கினார்கள். கடைசியாக அவர்கள் தங்களுடைய சொந்தத் திட்டங்களை முன் வைத்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள்தான் இறுதியான பலன், அனுபவசாத்திய முறையில்

தாங்கள் நடந்து கொள்கிறதாகவும், காங்கிரஸ்—லீகின் சமரஸசாத்தியமற்ற வழிகளுக்குத் தாங்கள் நடு வழியைக் காட்டுவதாகவும் அவர்கள் கபட வேஷம் போடுகிறார்கள். ஆனால் வாஸ்தவத்தில் அவர்களுடைய திட்டம் நடு வழியைக் காட்டுவது அல்ல. இன்றைய மாறுபட்ட தேசீய, சர்வ தேசீய, நிலைமைகளுக்குப்பொருந்தும்படியான ஏகாதிபத்தியவாதியின் புதிய திட்டமேயொழிய, அது வேறொன்றுமல்ல. இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கான திட்டமல்ல; அதற்கு பதில், வேறுபட்ட புதிய வேஷத்தில், புதிய உருவத்தில், இந்தியாவிலேயே நிலைத்துத் தங்கியிருப்பதற்கான திட்டமே அது.

## யூனியன் சர்க்காரின் மத்திய நிர்வாகம்

யூனியன் சர்க்காருக்கு ஒரு மத்திய நிர்வாகம்—மத்திய சர்க்கார்—அமைக்கப்படும் என்பதுதான் அத்திட்டத்திலுள்ள பிரதான கேந்திரம். இந்த "மத்திய நிர்வாகம்" புதுவிதமானது-உலக ஜனநாயகத்தின் சரித்திரத்தில் இதுவரை என்றுமே எவ்விடத்திலும் இத்தகைய நிர்வாகத்தை நாம் கண்டதில்லை.

அந்த மத்திய நிர்வாகத்திற்கு சட்டசபை எதுவும் இருக்காது. ஆதலின் அது பொறுப்பற்றது: எதேச்சாதிகாரம் செலுத்தக் கூடியது.

ஒன்றையொன்று எதிர்த்து எப்போதும் அடித்துக்கொண்டிருக்கிற இரண்டு சமஷ்டிகளை அடிப்படையாகக்கொண்டு அது அமைக்கப்படும். ஹிந்து சமஷ்டி ஒருபுறம்; முஸ்லிம் சமஷ்டி மறுபுறம். ஆதலின், இந்த மத்திய நிர்வாகத்தின் தராசு பிரிட்டிஷாரின் கரங்களிலோ அல்லது அவர்களுடைய கைக்கூலிகளின் கரங்களிலோ சதா சர்வகாலமும் இருந்து கொண்டிருக்கும்.

நிரந்தரமாக இந்தியாவை ஹிந்துக்கள் என்றும், முஸ்லிம்கள் என்றும் பிளவுபடுத்தி வைத்திருப்பதை அடிப்படையாகக் கொண்ட மத்திய நிர்வாகம் அது. சமஸ்தானாதிபதிகளின்மூலம் இந்தப் பிளவு விரிவாக்கப்பட்டு, நிலைத்திருக்கும்படி செய்யப்படும்.

மத்திய நிர்வாகம் எவ்விதம் அமைக்கப்படும், எவ்விதம் அது வேலை செய்யும் என்பதை இப்போது நடக்கும் சிம்லா மகாநாடே ஒரு கண்ணாடிபோல் நமக்குக் காட்டுகிறது. இன்றைக்கு நான்கு காங்கிரஸ் பிரதிநிதிகள், நான்கு லீக் பிரதிநிதிகள், நான்கு பிரிட்டிஷ் பிரதிநிதிகள் அங்கு உட்கார்ந்திருக்கின்றனர். நாளைக்கு அதற்கு யூனியன் மத்திய நிர்வாகம் என்று பெயர் கொடுக்கப்பட்டால், நான்கு காங்கிரஸ் பிரதிநிதிகள், நான்கு லீக் பிரதிநிதிகள், நான்கு சமஸ்தானாதிபதிகளாகவும், கடைசியில் பிரிட்டிஷ் வைஸ்ராய் பதின்மூன்றாவது பிரதிநிதியாகவும் இருந்தாலும்

இருக்கக்கூடும். வைஸ்ராய் என்ற பெயர் நமக்குப் பிடிக்கவில்லை என்று தெரிந்தால், அவருடைய பெயர் வேண்டுமானல் மாற்றியழைக்கப்படும்.

இத்தகைய மத்திய நிர்வாகம்தான், புதிய உலகிலே இந்தியா ஒரு மகத்தான சக்தியாக இயங்கும்படி செய்கிற விவகாரங்களை —அதாவது அந்நிய நாட்டு விவகாரங்கள், பாதுகாப்பு, போக்கு வரத்து முதலியவற்றை நிர்வகிக்கும். இத்தகைய மத்திய நிர்வாகத்தினல் ஆளப்படுகின்ற இந்தியா பலஹீனமானதாகவும், பிளவு பட்டதாகவும் இருக்குமென்றும், பிரிட்டிஷாரால் மறைமுகமாகக் கட்டுப்படுத்தப்பட்டு இயங்க வைக்கப்படும் என்றும் யாரால் சந்தேகமின்றிச் சொல்ல முடியாது? ஒன்றுபட்டு மிகவும் சக்தி வாய்ந்த பரிபூரண சுதந்திர அரசாங்கமாக இந்தியா இருக்காது; உலகத்தில் தன் இச்சைப்படி இயங்கி தன் கடமையை நிறைவேற்றக்கூடிய சுதந்திர நாடாக இருக்காது; இதற்குப் பதில் ஏகாதிபத்திய ஆதிக்க வேட்டையில் ஈடுபட்டு உலகத்தை தன் ஆதிக்கத்தின்கீழ் வைத்துக்கொள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் செய்கிற தில்லுமுல்லு திருகுதாள சூதாட்டத்தில், அதனுடைய சொக்கட்டான் காயாகப் பயன்படும் இந்தியாவாக இருக்கும்.

## இரண்டு சமஷ்டிகள்

அத்தகைய யூனியன் மத்திய நிர்வாகம், இரண்டு சமஷ்டிகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும். ஹிந்து மெஜாரிட்டி மாகாணங்களைக் கொண்ட சமஷ்டி ஒன்று; முஸ்லிம் மெஜாரிட்டி மாகாணங்களைக் கொண்ட சமஷ்டி மற்றென்று. இவ்விதம் எப்படி நம்முடைய ஜனங்கள் ஹிந்துக்கள் என்றும், முஸ்லிம்கள் என்றும் செயற்கை முறையில சாஸ்வதமாகப் பிரிக்கப்பட்டுக் கிடப்பார்கள் என்பதையும், ஏகாதிபத்திய திட்டத்தின்படி அவர்களுக்கிடையே பரஸ்பர உறவுகள் எவ்விதம் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் பார்த்தால் மட்டும் போதாது.

இந்தியா சுதந்திரமடைவதற்கும், மேன்மையடைவதற்கும் முஸ்லிம் லீக்தான் பிரதான முட்டுக்கட்டையாக இருக்கிறது என்று காங்கிரஸ் தலைமைப் பதவி இதுவரை பிரசாரம் செய்து வந்திருக்கிறது. பாக்கிஸ்தானை அடைவதற்கு காங்கிரஸ்தான் பிரதான முட்டுக்கட்டையாக இருக்கிறது என்று லீக் தலைமைப் பதவி பிரசாரம் செய்து வந்திருக்கிறது. இன்றைக்கு இரண்டு ஸ்தாபனங்களின் தலைவர்களாக அவர்களிருக்கிறார்கள். நாளைக்கு ஹிந்து, முஸ்லிம் ஆகிய இரண்டு சமஷ்டிகளின் தலைவர்களாக அவர்கள் நிலைத்துவிட்டால், ஒவ்வொருவரும் தம்தம் சமஷ்டியின்

விவகாரத்தில் மற்ற சமஷ்டி தலையிடுகிறதா, பொதுவான முன்னேற்றத்தை தடுக்கிறதா என்று பார்ப்பது இயற்கை. இவ்விதம் இன்றைய அரசியல் சச்சரவுகள் நாளைக்கு மிகப் பெரிய நெருக்கடியாக உருவெடுக்கும். ஒரு ஸ்தாபனம் இன்னொரு ஸ்தாபனத்தின்மீது இன்று பழி கூறுகிறது. நாளைக்கு ஒரு சமஷ்டி சர்க்கார் இன்னொரு சமஷ்டி சர்க்கார்மீது பழி கூறுவதாக இருக்கும். இவ்விதம் இரண்டு சமஷ்டி சர்க்கார்களும் ஒருவரையொருவர் எதிர்த்து சச்சரவிட்டுக் கொண்டிருக்கும்போது, இரண்டு சமஷ்டிகளுக்கும் பொதுவாகவுள்ள யூனியன் மத்திய நிர்வாகத்திலுள்ள தங்களுடைய பிரதிநிதிகள் மூலமும், வேறு பல வழிகளிலும், மத்தியஸ்தர் வேஷத்தில் என்றென்றைக்கும் பிரிட்டிஷ் சர்க்கார் ஆதிக்கம் செலுத்திக்கொண்டே இருக்கும்.

58761

## சமஸ்தானங்கள்

நம் நாட்டிலுள்ள பிளவுகளும், வேற்றுமைகளும் ஆயிரமடங்கு பெருகுவதற்கும், அவற்றிற்கு அரசாங்க உருவத்தைக் கொடுப்பதற்கும், ஹிந்து-முஸ்லிம் வித்தியாசங்களை மட்டும்தான் ஏகாதிபத்தியவாதியின் திட்டம் பயன்படுத்திக்கொள்கிறது என்று நினைக்கவேண்டாம். சுதேச சமஸ்தானங்களையும் இக்காரியத்திற்கு அவர்கள் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

சுதேச சமஸ்தானங்களில் இன்றைக்கு ஒரே இனத்தைச் சேர்ந்த ஜனங்கள் பிளவுபட்டுக் கிடக்கின்றனர். (உதாரணமாக, மலையாளிகள் மூன்று பிரிவுகளாக பிளவுப்படுத்தப்பட்டுக் கிடக்கிறார்கள்.)

இந்த சமஸ்தானங்களில் மிகப்பெரியவை யூனியன் மத்திய நிர்வாகத்திற்குள் வந்துவிடும். நடுத்தரமானவை அந்தந்த சமஷ்டிகளில் சுயேச்சையான உறுப்புகளாகச் சேர்ந்துகொள்ளும். மிகவும் சிறியதாக இருப்பவைமட்டும்தான் மாகாணங்களின் பகுதிகளாக ஆக்கப்படும்.

இவ்விதம் மூன்று அரசாங்க யந்திரத்திலும் பிரிட்டிஷாரின் கைக்குழந்தைகளான சமஸ்தானாதிபதிகள்—நிலப் பிரபுத்துவப் பிற்போக்குவாதிகள்—திணிக்கப்படுவர். மத்திய நிர்வாகத்திலாகட்டும், சமஷ்டிகளிலாகட்டும், மாகாணங்களிலாகட்டும், ஒவ்வொரு சமயத்திலும், ஒவ்வொரு விவகாரத்திலும் பிற்போக்குவாதிகள் நடுவில் நின்றுகொண்டிருப்பார்கள்.

## ஏகாதிபத்தியத் திட்டம்

ஏகாதிபத்தியவாதியின் திட்டம் அமுலுக்கு வந்தால் ஏற்படக்கூடிய விளைவுகளைப்பற்றி நமக்கு எந்தவிதமான மனப் பிரமை

களும் இருக்கக்கூடாது. இந்தத் திட்டத்தின்மூலம் எதை அடைய முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள்?

ஹிந்து என்றும், முஸ்லிம் என்றும் தேசத்தை பிளவுபடுத்துவதின் மூலம் தங்களுக்கு விரோதமாக இப்புதியக் கட்டத்தில் ஹிந்து முஸ்லிம் மக்களின் ஐக்கியக் கூட்டு போராட்டம் ஏற்படாதவாறு தடுத்துத் தாங்கள் தப்பித்துக்கொள்ளலாம் என்று நம்புகிறார்கள். இந்தியாவெங்கும் வியாபித்த ஐக்கிய சுதந்திர இயக்கத்தைப் பற்றி நாம் காணும் கனவுகளெல்லாம் கடந்த காலத்தைப்பற்றிய வெறும் நினைவுகளாகி விடும்படி செய்யநினைக்கிறார்கள்.

ஹிந்து என்றும், முஸ்லிம் என்றும் நாட்டை பிளவுபடுத்துவதின் மூலம், பொருளாதார ரீதியில் தேசத்தை பலஹீனப்படுத்தி விடலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். தம்தம் சமஷ்டிகளில் ஹிந்து முஸ்லிம் முதலாளிகள் புகுந்துகொண்டு நிலைத்துவிடுவார்கள் என்றும், வியாபாரத்தில் அவர்களுக்குள் போட்டி ஏற்படும் என்றும், இந்தப் போட்டிச் சண்டையில் ஒவ்வொருவரும் பிரிட்டிஷ் முதலாளிகளின் ஆதரவையும், உதவியையும் நாடி ஒருவருக்கொருவர் முந்திக்கொண்டு ஓடிவருவார்கள் என்றும் எதிர்பார்க்கிறார்கள். தேசம் முழுவதையும் தழுவிய பொருளாதாரத் திட்டம் என்றால், ஏழ்மையை எதிர்த்து யுத்தம் புரிவதாகும்; ஏழ்மையை சிருஷ்டிப்பவர்களை எதிர்த்துப் போரிடுவதாகும்; கொள்ளை லாபக்காரர்களை, நிலச்சுவான்தாரி அட்டைகளை எதிர்த்து சண்டையிடுவதாகும். ஆகவே, இரண்டு சமஷ்டிகளிலும் ஹிந்து முஸ்லிம் முதலாளிகள் அழுத்தமாக உட்கார்ந்துவிட்டால், இந்தத் திட்டம்—தேச ரீதியான பொருளாதாரத் திட்டம்—இன்றைக்கு உடனடியாக நிறைவேற்றப்படவேண்டிய காரியமாக இல்லாமல் மறைந்துவிடும்.

ஹிந்து என்றும், முஸ்லிம் என்றும் தேசத்தை பிளவுபடுத்துவதின்மூலம், நம் தேசத்தைப் பொதுவாக பலஹீனமாக வைத்திருப்பதோடல்லாமல்,—நம் மக்களைப் பிளவுபட்டவர்களாக வைத்திருப்பதோடல்லாமல்—யூனியன் மத்திய நிர்வாகத்தின் அந்நிய நாட்டு கொள்கையைத் தங்கள் இஷ்டப்பட்டபடி உருவாக்கி, நம்முடைய பாதுகாப்பு படைகளைத் தங்களுடைய ஆதிக்கத்தின்கீழ் வைத்துக்கொள்ளலாம் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். ஐரோப்பாவில் உதயமாகியிருக்கும் புதிய ஜனநாயக நாடுகளையும், சோவியத் யூனியனையும் எதிர்த்து ஒழித்துக் கட்ட ஆங்கிலோ—அமெரிக்கப் பிற்போக்குவாதிகள் திட்டமிடுகின்றனர். மற்ற பர்மா, மலேயா, இந்தோனேஷியா, மத்திய கிழக்கு ஆகிய அடிமை நாடுகளில் பொதுமக்களின் சுதந்திர இயக்கங்கள் தினேதினே

வலுவுள்ளசக்தியாக வளர்ந்துவருகின்றன. இவற்றை அடக்கவும் அச்சதிகாரர்கள் திட்டமிடுகின்றனர். பிற்போக்குவாதிகளின் இந்தத் திட்டத்திற்கு ஏற்றவாறு இந்திய மத்ய சர்க்காரின் அந்நிய நாட்டுக்கொள்கையை உருவாக்கவும், இந்தியப் படைகளைத் தங்களுடைய இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பயன் படுத்திக்கொள்ளவும், தங்களால் முடியுமென்று நம்புகிறார்கள்.

## நம் வித்தியாசங்களை பயன்படுத்திக் கொள்ளுதல்

இது இந்திய சுதந்திர திட்டமல்ல என்பது வெட்டவெளிச்சம். ஒரு இந்தியன் மற்றொரு இந்தியனை எதிர்த்துச் சண்டையிடும்படி செய்வதின் மூலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசாங்கத்திற்கு அடி பணிந்து கிடக்கும் நாடாக இந்தியாவை நிரந்தரமாக வைத்திருப்ப தற்கான திட்டமே இது என்பதும் பட்டப்பகல்போல் விளங்கும்.

இது ஒரு புதிய திட்டமும் அல்ல. 1944ம் வருடம் நவம்பர் மாதத்திலேயே, "கூப்லந்து திட்டம்" என்ற தலைப்பில் தோழர் **ஜி. அதிகாரி** எழுதிய சிறு பிரசுரத்தில் இதை நாங்கள் ஜனங்களி டம் அம்பலப்படுத்தியிருக்கிறோம். இந்தத் திட்டத்தைப்பற்றியே எங்களுடைய "தேர்தல் அறிக்கை"யில் திரும்பவும் நம்தேச மக் களை முன்கூட்டியே எச்சரித்தோம். ஆனால் எங்களுடைய குரல் ஒரே ஒரு குரல்தான். மற்ற இரண்டு பெரிய கட்சிகளும் என்ன வருகிறது என்றே பார்க்கவில்லை. காங்கிரஸ் தலைமைப் பதவி யும் சரி, லீக் தலைமைப் பதவியும் சரி, கீழ்க்கண்ட இரண்டு விஷ யங்களைப்பற்றி அளவுக்கு மீறிய தன்னம்பிக்கை கொண்டிருந் தன; ஜனங்களுக்கு மிகவும் அதிகமாக உத்திரவாதங்களைக் கொடுத்தன. அவை: (1) தேர்தல்கள் முடிந்தவுடன் அவர்கள் தங்களுடைய லக்ஷியத்தைத் தங்களுடைய சொந்த பலத்தைக் கொண்டே அடைவார்கள்; (2) இந்தத் தடவை பிரிட்டிஷார் கண்டிப்பாக சமரஸத்திற்கு வந்துதான் தீரவேண்டும். ஏனெ னில், அவர்களுக்கு இதைவிட்டால் வேறு வழியில்லை.

இந்த இரண்டு எண்ணங்களும்—கணக்குகளும்—தவறாகப் போய்விட்டன என்பது இப்போது மிகவும் தெளிவாகத் தெரி யும். எந்த இடத்தில் அவர்கள் தவறாகச் சென்றனர்?

காங்கிரஸிற்கும், லீகிற்கும் பொதுஜனங்களின் அபரிமித மாத ஆதரவு இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. தம் தம் பலத்தைப்பற்றித்தான் அவர்கள் ஒவ்வொருவரும் நினைத்தார்கள். இந்திய அரசியல் நிலைமையிலுள்ள பொதுவான பலஹீனம் முழுவதையும் அவர்கள் மறுத்தார்கள். நம் எல்லோருக்கும் பொதுவாகவுள்ள சுதந்திர உணர்ச்சி இருந்தபோதிலும், நமக்குள்

ளேயேவுள்ள வித்தியாசங்களை—நம் பலஹீனத்தை—கவனிக்க மறுத்தனர்.

தன்னுடைய பலஹீனத்தை பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஆளும் கூட்டம் நன்கு அறியும். இந்திய தேசீய ராணுவத்தினர் விடுதலைக் கிளர்ச்சியிலும், இந்தியக் கடற்படை வீரர்களின் எழுச்சியிலும், தேர்தல் பிரசார இயக்கத்திலும் நாம் கண்ட ஏகாதிபத்ய எதிர்ப்பு எழுச்சிக்கு ஈடு இணையில்லை. இதோடு, 'இதோ, அதோ' என்று மிகப்பெரிய பஞ்சம் பயமுறுத்திக்கொண்டிருக்கிறது. தொழிலாளரிடையே மிகப்பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய ஈடு இணியற்ற ஏகாதிபத்ய எதிர்ப்பு அலைகளுக்கு நடுவே தங்களுடைய நிலைமை படுமோசமாக இருப்பதை அவர்கள் அறிவார்கள். ஆவவே, தங்களுடைய பலஹீனத்தை பலமாக மாற்றுவதற்கு முந்திக்கொண்டர். நம் தேசத்தில் நம் மக்களில் எந்தப் பகுதியினரும் தங்களைக் கைவிட்டு விடுவதற்கு முன்பு, நம்மிடையேயுள்ள வித்தியாசங்களை—நம்பிரதான கட்சிகளுக்கிடையேயுள்ள மிகவும் அதிகமான வேற்றுமைகளை—பூமுக்க முழுக்கப் பயன்படுத்திக்கொண்டனர். 'லகானை'த் தங்கள கையிலெடுத்துக்கொண்டனர்; மந்திரிகள் தூது கோஷ்டியை அனுப்பினர்; வைஸ்ராயின் நந்தவனப் பாதையில் மேலும், கிழமாகக் காங்கிரஸ், லீக் தலைவர்களை ஒரு மாத காலத்திற்குமேலாக நடக்கவைத்தனர். கடைசியாக இந்தத் திட்டத்துடன் வெளியே வந்திருக்கின்றனர்.

## வலை வீசும் முறைகள்

இந்தியாவின் எதிர்காலத்தைப்பற்றி தன்னுடைய சொந்த திட்டத்தைவைத்துக்கொண்டு இந்தியத் தலைவர்களைச் சந்திப்பதற்கு ஏகாதிபத்தியப் பிற்போக்கு வாதிகள் முன்வந்திருக்கின்றனர்- இவ்விதம் முன்வர இந்திய உள்நாட்டு வேற்றுமைகளே அவர்களுக்கு தைரியமளித்திருக்கின்றன. இந்த மிகவும் துக்கரமான விஷயம் இதோடு முடிந்துவிடவில்லை. பந்தயத்தில் பிரிட்டிஷார் முதல் வெற்றியை அடைந்துவிட்டனர். இரண்டாம் வெற்றியையும் அடைவதற்கு அவர்கள் பகீரதமுயற்சி செய்கிறார்கள்.

அவர்கள் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கி நடத்திய முறையும், இதுவரை காங்கிரஸ் லீக் தலைவர்கள் நடந்துகொண்டமுறையும்தான் முதல் பந்தயம். இதில் காங்கிரஸ்-லீக் தலைவர்களின் நிலை சமரஸம் சாத்தியமற்றது என்றும், ஒன்றுக்கொன்று நேர் எதிராக இருக்கும் காங்கிரஸ்-லீக் ஆகிய இரண்டின் நிலைகளுக்கும் நடுவில் தங்களுடைய திட்டம்தான் அனுபவசாத்தியமானதாக இருக்கிறது என்றும் உலகமெங்கும் இப்போது அவர்கள் பிரசாரம் செய்து காட்டிவிட்டனர். இவ்விதம், பரிட்டிஷ் ஏகாதிபத்ய

வாதியின் திட்டத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் வெற்றியடைந்தால், இது பிரிட்டிஷ் ராஜதந்திர நிபுணத்வத்தின் வெற்றி என்று உலக மெங்கும் பறையடிக்கப்படும்; தோல்வி யடைந்தால், இந்தியாவின் முன்னேற்றத்திற்கு இந்தியர்களுக்குள் வேற்றுமைகளே பிரதான முட்டுக்கட்டையாக இருக்கின்றது என்று சித்தரித்துக்காட்டப்படும். கடந்த சில நாட்களாக பிரிட்டிஷ் ரேடியோ நிலையம் ஒலிபரப்பி வரும் செய்திகளை ஒருவர் கேட்டால் போதும்! அல்லது அந்நிய நாட்டு நிருபர்கள் தங்கள் பத்திரிகைகளுக்கு அனுப்பும் செய்திகளைப் படித்தால் போதும்! அந்நிய நாடுகளிலுள்ள சுதந்திர பிரேமிகளிடையே எவ்விதம் இந்தியாவின் பெயர், திட்டம் போடப்பட்டுத் தொடர்ந்தாற்போல் அவமானத்திற்குள்ளாக்கப்படுகிறது என்பதை சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம்.

இரண்டாவதாக, லீக் இறங்கி வராவிட்டாபோதிலும், ஏதோ ஒருவிதமான மத்திய அமைப்பைக்கொண்ட ஏதோ ஒருவிதமான யூனியனை அமைப்பதாக ஆசை வார்த்தை கூறி காங்கிரசின் ஒத்துழைப்போ, அல்லது ஆதரவோ கோரப்படுகிறது. அந்த மத்திய நிர்வாகத்தின் கையிலேயே அந்நிய நாட்டு விவகாரங்களும், தேசப் பாதுகாப்பு விவகாரங்களும் இருக்குமென்றும் கூறப்படுகிறது. இந்த இரண்டு விவகாரங்களிலேயே காங்கிரஸ் மிகவும் சிரத்தை கொண்டிருக்கிறது என்பது வெளிப்படை. இந்த வலைதான் முதலில் வீசப்படுவது. காங்கிரஸ் சிரத்தை காட்டும் இன்னொரு விஷயமான மத்திய இடைக்கால சர்க்காரை அமைப்பது இரண்டாவது வலையாக வீசப்படுகிறது.

மூன்றாவதாக லீகின் ஆதரவையோ, ஒத்துழைப்பையோ அடைவதற்கு இன்னொருவிதமான ஆசை வார்த்தை கூறப்படுகிறது. "என்னதான் இருந்தாலும் தேசத்தை பிரிப்பது என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது. இனி என்ன இருக்கிறது? சாதாரணமாக ஒப்பந்தங்களின்மூலம் எந்த விவகாரங்கள் ஒழுங்குபடுத்தப்படுமோ, அந்த விவகாரங்களைத் தவிர வேறொன்றும் யூனியன் மத்திய நிர்வாகத்தினால் நிர்வகிக்கப்படவில்லை" என்று லீகிடம் கூறப்படுகிறது. காங்கிரசின் அழுத்தமான எதிர்ப்பு இருந்தபோதிலும், மூஸ்லிம் சமஷ்டியை ஏற்படுத்துவதை பிரிட்டிஷார் ஒப்புக்கொண்டு விட்டனர் என்றும், மூஸ்லிம் நலன்களுக்குத் தீங்கு ஏற்படும் என்ற பீதியின்றி இடைக்கால சர்க்காரில் சேருவதற்கு இதுவே—பிரிட்டிஷாரின் உடன்பாடுவே—போதிய உத்திரவாதம் என்றும் கருதப்படுகிறது!

காங்கிரஸ் இந்திய ஒற்றுமை என்கிறது. லீக் பிரிவினை என்கிறது. இந்த அடிப்படையான நிலையில் இரண்டு கட்சிகளுக்கும்

தங்களுடைய திட்டங்களில் சலுகைகளைக் கொடுப்பதின் மூலம், இரண்டு சமஷ்டிகள் என்ற கருத்தை காங்கிரஸ் ஒப்புக்கொள் ளும்படி செய்வதற்கும், யூனியன் மத்திய நிர்வாகம் இருக்க வேண்டுமென்ற கருத்தையும், இடைக்கால சர்க்காரில் சேர வேண்டும் என்ற அபிப்பிராயத்தையும் லீக் ஒப்புக்கொள்ளும்படி செய்வதற்கும் வலை விரிப்பதே சிம்லாவில் பிரிட்டிஷார் நடத்தும் போராட்டம். பிரிட்டிஷாரின் நேர்மையிலும், நடுவு நிலைமையி லும் இரண்டு கட்சிக்குமுள்ள நம்பிக்கையை அப்படியே வைத்து தங்களுடைய திட்டத்தை திணிப்பது; இதன்மூலம் காங்கிரசோ, லீகோ போராட்டம் ஆரம்பிக்காமல் தடுத்து தாங்கள் தப்பித்துக் கொள்வது. தங்களுடைய திட்டத்தின் நேர்மையிலும், தங்களு டைய பிரதிநிதிகளின் ராஜதந்திர நிபுணத்துவத்திலும் மட்டும் நம்பிக்கை வைத்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இந்தப் பேச்சுவார்த்தைகளை நடத்துகிறார்கள் என்று எண்ணிவிட வேண் டாம். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மகத்தான சக்தியைப்பற்றி பின்னணி சங்கீதம் பாடுவதிலும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இதனால்தான் பேச்சுவார்த்தை முறிந்தால் பிரிட்டிஷ் போலீஸ் படையும்' ராணுவமும் தேசபக்தர்களைக் கைது செய்வதற்கு தயாராவதாகவும், ராணுவச் சட்டத்தை அமுல் நடத்தத் தயா ராவதாகவும், இன்னும் இதுபோல பல செய்திகளும் அடிக்கடி பிரசுரிக்கப்படுகின்றன. டில்லி அதிகார வர்க்கத்தினர் வேண்டு மென்றே கொடுக்கப்படும் செய்திகள் இவை என்பது வெட்ட வெளிச்சம்.

வாஸ்தவத்திலேயே என்ன நடக்கக்கூடும் என்பதை சுட்டிக் காட்டுவதைத் தவிர, இப்போது வேறொன்றும் சமீப எதிர்காலத் தைப்பற்றி முன்கூட்டியே கூறுவதென்பது கஷ்டமாக இருக் கிறது. 'லகான்' பரிபூரணமாக பிரிட்டிஷாரின் கரங்களிலிருக் கிறது. நாம் நமக்குள் வித்தியாசங்களைத் தீர்த்துக்கொண்டு, "வெளியேறு" என்று ஒன்றுபட்ட கோரிக்கையை அவர்கள் முன் வைக்கமாட்டோம் என்பதை மிகவும் நன்றாக ஊர்ஜிதம் செய்துகொண்ட பிறகே, தங்களுடைய திட்டத்தை நம் தலைவர் கள் முன் வைப்பதற்கு அவர்களுக்கு பலம் ஏற்பட்டது. நம்மு டைய வித்தியாசங்களைப் பயன்படுத்திக்கொள்ளும்படியான திட் டங்களை அவர்கள் கூறியிருக்கிறார்கள்; என்றென்றைக்கும் நம் மைப் பிளவுபட்டவர்களாகப் பிரித்து வைப்பதற்கு திட்டம் வகுத் திருக்கிறார்கள். இவ்விதம், நாம் ஒருவர் சிண்டை ஒருவர் பிடித் துக்கொண்டு, சதா சர்வகாலமும்—எகிப்தைப்போல் வாயளவில் சுதந்திரம் என்று பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும்—அவர்களு டைய தயவை நாடியே வாழும்படி செய்கிறார்கள்.

ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சியை காங்கிரஸ்—லீக் தலைவர்கள் பார்ப்பார்களா? அவர்களுடைய தந்திரத்தை அறிவார்களா? அவர்களுடைய வலையில் சிக்காமலிருப்பார்களா? அல்லது என்ன செய்வது என்று வகையறியாது தத்தளித்துக்கொண்டு, "நாங்கள் ஏமாற்றப்பட்டோம்" என்று கூக்குரலிட்டுக்கொண்டு வெறுங்கையோடு திரும்புவார்களா?

பிரதான இந்திய அரசியல் கட்சிகளுக்கிடையிலுள்ள சமரஸ சாத்தியமற்ற வேற்றுமைகளினலேயே, தங்களால் வெற்றியடைய முடியும் என்று ஏகாதிபத்தியவாதிகள் நம்புகிருர்கள். இரண்டு கட்சிகளின் தலைவர்களும் ஒன்றுபட்டு, ஒரே ஒரு திட்டத்தை முன் வைப்பதின்மூலம்தான், உடனடியாக ஏகாதிபத்ய வாதிகளையும், அவர்களுடைய திட்டத்தையும் முறியடிக்க முடியும்.

சுதந்திரத்தை நேசிக்கும் ஒவ்வொரு இந்தியனும் மனப்பூர்வமாக விரும்புகிறபடி பிரிட்டிஷ் இராணுவத்தையும், பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்தையும் இந்த நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு உடனடியாக எவ்விதம் தேசீய ஒற்றுமையை உண்டாக்குவது என்பதற்கு அனுபவ சாத்தியமான திட்டங்களை எங்களுடைய கட்சி தன்னுடைய யாதாஸ்த்தில் காட்டியதோடு, நம்முடைய உள் நாட்டு வேற்றுமைகளை நாமே நமக்குள் தீர்த்துக்கொள்வதற்கு நியாயமான ஜனநாயக பூர்வமான யோசனைகளையும் எங்கள் கட்சி கூறியிருக்கிறது.

இன்று இந்த பேராபத்திலிருந்து மீள இது ஒன்றுதான் வழி. ஏகாதிபத்தியக் கூப்லந்து திட்டத்தைக் குறித்து எச்சரித்தது எங்கள் குரல் ஒன்றுதான். இன்று அதே திட்டம் நம் கண்ணெதிரில் வந்துவிட்டது. இன்றும் எங்களுடைய குரல் ஒன்றுதான் உண்மை வழியைக் காட்டுகிறது.

பிரிட்டிஷ் சர்க்காருடன் தனித் தனியாகப் பேசி சமரஸத்திற்கு வருவது என்று காங்கிரஸ் லீக் தலைவர்கள் முயற்சிக்கிருர்கள். இந்த வழியை விட்டுவிட்டு ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒன்றுபட்டு, ஒவ்வொரு இந்திய தேசீய இனத்திற்கும் சுயநிர்ணய உரிமையை வழங்குவதை அடிப்படையாகக் கொண்ட இந்தியர்களின் திட்டத்தை ஏகாதிபத்தியவாதிகளின் முன் வைப்பார்கள் என்று நம்புவதற்குக் கொஞ்சங்கூட இடமிருப்பதாகத் தெரியவில்லை. சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்ட இந்திய சுதந்திரத் திட்டத்தில்தான், ஹிந்து முஸ்லிம் மக்களின் உண்மையான சுதந்திரம் இருக்கும்.

தன்னுடைய சொந்த ஸ்தாபனத்தைப் பற்றி அகங்காரம் கொள்வதும், உன்னுடைய சொந்த சகோதர மக்கள்மீது வெறுப்புக்கொள்வதும், உலக முழுவதிலுமுள்ள மேல் வர்க்கத்தாரின்

அரசியல் கண்ணேட்டமாகும். ஒரு அடிமை நாட்டில் இத்தகைய கண்ணேட்டமானது, பொதுவான சுதந்திர இயக்கத்தைப் பிளவு படுத்திவிடுகிறது.

இந்திய சுதந்திரப் படகு ஜன ஆதரவுள்ள அதனுடைய தலைவர்களால் வெவ்வேறு திசைகளை நோக்கி வலிக்கப்படுகிறது; படகு சுழலுகிறது; கரைக்குக் கொண்டுபோய் தலைவர்கள் சேர்த்துவிடுவார்கள் என்று நம்பிக்கொண்டு, வாய் பேசா பிரயாணிகளைப்போல் பாமர மக்கள் உட்கார்ந்திருக்கின்றனர்.

இவ்விதம்தான் பிரிட்டிஷ் ஆளும் கூட்டம் காட்சியளித்து, நிலைமையை தங்களுக்குச் சாதகமாகத் திருப்ப வருகின்றனர். நமக்கு வழிகாட்டி நடத்துவதாக அவர்கள் கூறுவதிலிருந்தே இது தெளிவாகத் தெரியும். நாளைக்கு அவர்களுடைய திட்டம் பிரசுரிக்கப்பட்டால் இன்னும் தெளிவாகப் பட்டப்பகல் வெட்ட வெளிச்சமாகப் புரியும்.

ஒவ்வொருவரும் குழப்பமடைந்திருக்கின்றனர்; ஆனால் இன்னும் ஏதாவது வரக்கூடும் என்று நம்பிக்கைக்குமேல் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். இன்னும் பிரமைகள் சூழ்ந்த உலகிலே சஞ்சரிப்பது என்றே இதற்கு அர்த்தம்.

பிரிட்டிஷாரின் திட்டத்திற்கு இந்தியத் தலைவர்கள் இணங்கி அடிபணிந்துவிடுவார்களா? அல்லது பிரிட்டிஷாரை வெளியேற்றுவதற்கும், சுதந்திர இந்தியாவின் உருவம் எப்படி இருக்குமென்று தீர்மானிப்பதற்கும் இந்தியர்களின் சொந்தத்திட்டத்தை வகுப்பார்களா? இவைதான் இன்றுள்ள கேள்விகள்.

பிரிட்டிஷ் திட்டம் முறியடிக்கப்பட்டு அதன் இடத்தில் இந்தியர்களின் திட்டம் தோன்றுவதற்கே இதுவரை எங்களுடைய கட்சியின் முயற்சிகளெல்லாம் ஈடுபட்டிருந்தன; இனியும் ஈடுபட்டிருக்கும்.

# கம்யூனிஸ்டு யாதாஸ்து

*[பிரிட்டிஷ் மந்திரிகளின் தூதுகோஷ்டியிடமிருந்து கம்யூனிஸ்டு கட்சியின் பொதுக்காரியதரிசி தோழர் பி. ஸி. ஜோஷிக்கு அழைப்பு வந்தது. அதற்கிணங்க அக்கோஷ்டியை அவர் பார்த்தபோது, கட்சியின் சார்பில் அவர்களிடம் அவர்கொடுத்த யாதாஸ்தைக் கீழே தருகிறோம்.]*

## 1. பரிபூரண சுதந்திர பிரகடனம்

நமது அரசியல் அடிமைத்தனத்திற்கும் பொருளாதாரச் சிரழிவுக்கும் மூல காரணமான பிரிட்டிஷ் ஆட்சி உடனடியாக ஒழிய வேண்டுமென்று இந்தியர்கள் அனைவரும் ஒருமுகமாக விரும்புகின்றனர். கடந்த 200 வருடகால பிரிட்டிஷ் ஆட்சி—மிருகத்தனமான அடக்குமுறைமூலம் இந்திய மக்களை ஒடுக்கிவரும் பிரிட்டிஷ் ஆட்சி பஞ்சமும், வறுமையும், இல்லாக் கொடுமையும் இந்தியப் பொதுமக்களை வாட்டிவதைத்து வருவதற்குக் காரணமாயிருந்த பிரிட்டிஷ் ஆட்சி, நம்நாட்டின்மீதுள்ள பிரிட்டிஷ் எஜமானத்துவம், வேரோடு பிடுங்கி எறியப்படாதவரையில், இந்தியன் எவனுக்கும் நாகரீக நல்வாழ்வு கிடையாது என்று உணர்த்திவிட்டது. பிரிட்டனில் அடுத்தடுத்து பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும், கொடுத்த வாக்குறுதிகளை குப்பைத் தொட்டிகளில் போட்டுவந்திருப்பதால், இந்திய மக்கள் கைக்கு அதிகாரத்தை மாற்ற பிரிட்டன் மனப்பூர்வமாக விரும்புகிறது என்ற பேச்சை, இன்று எந்த இந்தியனும் நம்பத் தயாராயில்லை.

ஆகவே, மந்திரி சபை தூதுக்கோஷ்டியின் செய்கையைக்கொண்டே அதன் நேர்மையை, கம்யூனிஸ்டுக்கட்சி தீர்மானிக்கும் அந்த நேர்மைக்கு முதல் ருஜுவாக கம்யூனிஸ்டுக்கட்சி வற்புறுத்தும் கோரிக்கை இதுதான்:—சந்தேகத்துக்கோ, இரண்டர்த்தத்துக்கோ இடம் வைக்காத முறையில், இந்திய சுதந்திரத்தையும் இந்தியாவின் பரிபூர்ண அரசுரிமையையும் அங்கீகரித்து, தெள்ளத் தெளிவாக பிரகடனம் செய்யவேண்டும்.

அடுத்த ருஜுவாக, ஆறுமாத காலத்திற்குள், சமஸ்தானங்கள் உட்பட அகில இந்தியாவிலிருந்தும் பிரிட்டிஷ் துருப்புகளைப்

பரிபூரணமாக வாபஸ் வாங்கிவிட உறுதி செய்துவிட்டதாக பிரிட்டிஷ் சர்க்கார் பகிரங்கப்படுத்தவேண்டும்.

இந்திய அரசியல் கட்சிகள் தங்களுடைய வித்தியாசங்களைத் தீர்த்துக் கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் இந்தப் பிரகடனம் கிரியாம்சையில் வந்து தீரவேண்டும். இந்திய ஒற்றுமைப் பிரச்னை இந்தியாவின் குடும்பப் பிரச்னை. இந்திய மக்கள் தங்களுக்குள்ளே தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்னை. பிரிட்டன் அதிகாரத்தை மாற்ற மறுப்பதற்கு, அதை ஒரு சாக்குப் போக்காக பயன்படுத்திக்கொள்ளமுடியாது. பிரிட்டிஷ் துருப்புகளை வாபஸ் வாங்கும் வேலையும், இந்திய அரசுரிமை அங்கீகாரத்தை நிறைவேற்றும் காரியமும் உடனடியாக ஆரம்பிக்கவேண்டும். இவற்றை நிறைவேற்ற கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

## 2. அதிகாரமாற்றம்

பொதுஜனச் செல்வாக்குள்ள முக்கியமான அரசியல் கட்சிகள் பங்கெடுத்துக்கொள்ளும் விதத்தில் தற்காலிக சர்க்கார் ஏற்படவேண்டும். இதற்கு, காங்கிரஸ்-லீக் சம பிரதிநிதித்வ அடிப்படையில், மைனாரிட்டிகளுக்கு ஞாயமான பிரதிநிதித்வம் அளிக்கும்முறையில் தற்காலிக இடைக்கால சர்க்கார் ஏற்படுவதற்காக, காங்கிரஸ்-லீக் உடன்பாடு ஏற்படுத்துவதே சிறந்த முறை என்பது எங்கள் கருத்து.

பிரிட்டிஷ் சர்க்காரிடமுள்ள அதிகாரங்கள் ஒழியவேண்டும். இந்திய சர்க்கார், இந்திய சமஸ்தானங்கள் ஆகியவைமீதுள்ள சக்கிரவர்த்தியின் மேலதிகாரங்களும் ஆதிபத்ய உரிமைகளும் ஒழியவேண்டும். வைஸ்ராய், கவர்னர்கள் ஆகியோருக்குள்ள விசேஷ அதிகாரங்களும் ஒழியவேண்டும், இந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டால்தான், சம அந்தஸ்து அடிப்படையில், சுதந்திரமாக பிரிட்டிஷ் சர்க்காருடன் தற்காலிக சர்க்கார் பேச்சு வார்த்தைகள் நடத்தமுடியும். தற்காலிக சர்க்கார் சுதேச சமஸ்தானங்களின் பிரச்னையைத் தீர்க்கவும் அவர்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கவும் இது அவசியம்.

## இடைக்கால சர்க்காரின் வேலைகள்

(1) இடைக்கால சர்க்கார் ஏற்பட்டு ஆறுமாத காலத்திற்குள் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டவேண்டியதும், அதற்காக நடைபெறும் தேர்தல்கள் சுதந்தரச் சுற்றுணர்ச்சியில் ஜனநாயக முறையில் நடைபெறச் செய்யவேண்டியதும், தற்காலிக சர்க்காரின் முக்கிய வேலை.

(2) அரசியல் நிர்ணய சபை தேர்ந்தெடுக்கப்பட்டபின், இடைக்கால சர்க்கார் அந்த சபைக்குப் பொறுப்புள்ளதாயிருக்கும். அரசியல் நிர்ணய சபை கூடுவதற்குமுன், எந்த தேசத்துடனும் அரசியல் ஒப்பந்தமோ, பொருளாதார ஒப்பந்தமோ செய்துள்ள இடைக்கால சர்க்காருக்கு அதிகாரம் கிடையாது.

(3) பிரிட்டன் கொடுக்கவேண்டிய ஸ்டர்லிங் கடனை உடனடியாக வசூலிப்பதற்காகவும் பரஸ்பர வியாபார உறவுகளை நிர்ணயிப்பதற்காகவும் இடைக்கால சர்க்கார் ஒரு ஒப்பந்தத்தை தயாரிக்கவேண்டும், இதைத் திருத்தவோ, ஊர்ஜிதம் செய்யவோ அகில இந்திய அரசியல் நிர்ணய சபைக்கு உரிமை உண்டு.

## 4. அரசியல் நிர்ணய சபை

தங்களுடைய சொந்த அரசியலமைப்பை வகுத்துக்கொள்வது இந்திய மக்களுடைய உரிமை. பரிபூரண அரசுரிமை உடையவர்களும் இந்திய மக்கள்தான். பிரிட்டிஷ் அரசாங்கம் சிபார்சு செய்யும் அரசியல் அமைப்பு சபை ஜனநாயகத்திற்கு விரோதமானது. ஏனென்றால், அதன்படி, மாகாண சட்டசபை அங்கத்தினர்கள் அரசியல்-அமைப்பு சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள். இது மறைமுகத் தேர்தல். (நேரடியாக ஜனங்கள் தேர்ந்தெடுப்பதில்லை). தவிர, தற்கால மாகாண சட்டசபைகள் குறுகிய ஓட்டுரிமையை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டவை மிகப் பெரும்பாலான மக்களுக்கு அதிகாரமே இல்லை. ஆகவே, சர்வஜன வாக்குரிமை அடிப்படையில் மாகாண எல்லைகள் மாற்றியமைக்கப்படுவதின் மூலம் (எப்படி என்பது 5-வது பிரிவில் விளக்கப்பட்டிருக்கிறது) உருவாகும் தேசீய தாயகங்களின் சுய நிர்ணய உரிமை அங்கீகாரத்தின்பேரில், தற்காலிக சர்க்கார் அரசிய நிர்ணய சபையைக் காட்டவேண்டும்.

## 5. சுயநிர்ணய உரிமை

அரசியல் நிர்ணய சபை பிரச்னையில் காங்கிரஸுக்கும் லீகுக்கும் உள்ள தீவிரமான வேற்றுமைகளைத் தீர்க்க, சுயநிர்ணய உரிமைக் கொள்கையை நியாயமான முறையில் நிறைவேற்றுவதன் மூலம்தான் முடியும். தற்போதுள்ள மாகாண எல்லைகளை தேசீய இன அடிப்படையில், அந்த இனம் இயற்கையோடியைந்து வாழும் தொன்மையான தாயகத்தின் அடிப்படையில், மாற்றியமைக்க தற்காலிக சர்க்கார் ஒரு எல்லை கமிஷனை நிறுவவேண்டுமென்பது எங்கள் யோசனை. அப்படிச் செய்தால் மாற்றியமைக்கப்பட்ட மாகாணங்கள் ஒவ்வொன்றும் கூடியமட்டும் ஒரே பாஷை, ஒரே கலாச்சாரம், ஒரே பண்பாடு படைத்த தாயகமாக இருக்கும்.

மேற்கண்ட முறையில் எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டு, 6-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி சமஸ்தானங்கள் ஒழிக்கப் பட்டால், பின்வரும் தாயகங்கள் உருவாகும்:—தமிழ்நாடு, ஆந்திர தேசம், கேரளம், கர்னடகம், மஹாராஷ்டிரா; குஜராத், ராஜஸ்தானம், சிந்து, பலூசிஸ்தான், பட்டானியர் நாடு, காஷ்மீரம் மேற்கு பஞ்சாப், மத்திய பஞ்சாப், ஹிந்துஸ்தான், பீகார், அஸ்ஸாம், வங்காளம், ஒரிஸ்ஸா, ஒவ்வொரு தாயகத்தில் வாழும் மக்களுக்கும் பரிபூரண சுய நிர்ணய உரிமை உண்டு. இந்திய யூனியனில் சேர்வதா, தனி அரசாங்கம் அமைப்பதா, வேறு இந்திய யூனியனை அமைத்துக் கொள்வதா என்பதைத் தீர்மானித்துக் கொள்ளும் உரிமை அவர்களுக்கு உண்டு.

அதனால், இந்த அடிப்படையான உரிமையின் அங்கீகாரத்தின்பேரில்தான், அரசியல் நிர்ணய சபை தேர்தல்கள் நடக்க வேண்டும். பிரிவினை, யூனியன் பிரச்னைகளை அரசியல் கட்சிகள் ஜனங்கள்முன் வைப்பார்கள். அகில இந்திய அரசியல் நிர்ணய சபையில் சேர்வதா, சேராமல் தாங்கள் மாத்திரம் தனி ராஜ்யம் ஸ்தாபிப்பதா அல்லது வேறு இந்திய யூனியனை உருவாக்குவதா என்ற பிரச்னையை ஒவ்வொரு தாயகத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தாங்களாகவே மெஜாரிட்டி வோட் மூலம் தீர்மானிப்பார்கள்.

தங்கள் அரசாங்கங்களில் பூர்ண ஜனநாயகத்தை அளித்து, பரிபூர்ண அரசுரிமை உடைய தேசீய இன அரசாங்கங்கள் தாங்களாகவே சேர்ந்து ஒரு ஜனநாயக இந்திய யூனியனை ஸ்தாபிக்க வேண்டுமென்பது கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை. ஒரே யூனியனில் சேர்ந்து நிற்பதன்மூலம் இந்திய மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படுமென்றும், ஒரே சகோதரத்துவத்தில் இணைந்து நிற்பதன்மூலம், சுதந்திரத்தைப் பாதுகாத்து, ஏழ்மையிலிருந்தெழும் பிரச்னைகளை தீர்க்க முடியுமென்றும் கட்சி உறுதியாக நம்புகிறது. (வறுமை முதலிய பிரச்னைகளைத் தீர்க்க எல்லோருடைய ஒத்துழைப்பும் அவசியம்) மேற்கண்ட முறையில், சுய நிர்ணய உரிமைக்கொள்கையை நிறைவேற்றுவதன் மூலம்தான் இந்திய ஒற்றுமை பாதுகாக்க முடியும்.

## 6. சமஸ்தானங்கள்

இந்தியாவின் மூன்றிலொரு பாகத்தில் அரசுபுரிந்துவரும் சமஸ்தானதிபதிகளின் யதேச்சாதிகாரத்துக்கு சாவுமணி யடிக்க இந்திய மக்கள் உறுதிகொண்டிருக்கிறார்கள். இந்த மத்யகால யதேச்சாதிகாரிகளின் கீழ் மூன்றிலொருபங்கு இந்தியா இருப்பதை அனுமதித்தால் இந்திய ஜனநாயகம், இந்திய சுதந்திரம்

என்ற பதங்களுக்கே அர்த்தமில்லை. இந்திய சுதந்திரத்துக்கும் இந்திய ஜனநாயகத்திற்கும் ஆபத்து வந்துகொண்டேயிருக்கும். சமஸ்தானதிபதிகள் பிரிட்டிஷ் சர்க்காரின் சிருஷ்டிகள். பிரிட்டிஷ் ஆட்சியை நீடித்து வைப்பதற்காக உபயோகப்படுத்தப்படும் ஒரு சக்தி. அன்றும் இன்றும் என்றும் அவர்களை பிரிட்டிஷ் பீரங்கிகள் பாதுகாத்து வருகின்றன. பிரிட்டிஷ் சர்க்காருக்கும் அவர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தங்களையும் கடமைகளையும் இந்திய ஜனநாயகத்துக்கு உலைவைப்பதற்காக உருவான சதி என்று இந்தியா கருதுகிறது. ஆகவே, இடைக்கால சர்க்காரிலோ, அரசியல் நிர்ணய சபையின் தீர்மானங்களிலோ, அவர்களுக்கு பங்களிக்க முடியாது. பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களைப் போலவே, சமஸ்தானங்களில் வாழும் பொது மக்களுக்கும் வாக்குரிமை உட்பட சகல உரிமைகளும் அளித்தாகவேண்டும். தங்கு தடையின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் மூலம் தாங்கள் தனி மாகாணமாக வாழ்வதா, அல்லது தங்களது இனத்தாருடன் (மலையாளி, தமிழன்) புதிதாக அமைக்கப்பட்ட தாயகத்தில் ஐக்கியமாவதா என்பதை நிர்ணயிக்கும் உரிமை சமஸ்தான மக்களுக்கு வழங்கப்படவேண்டும்.

## 7. பிரஜா உரிமைகள்

ஒரு தேசத்தின் பரிபூர்ண சுதந்திரத்தைப்பற்றி பேச்சு வார்த்தை நடப்பதற்கு முன்பு பிரஜா உரிமைகள் பரிபூரணமாக வழங்கப்பட்டு, அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படுவது சர்வசாதாரணமான விஷயம். ஆனால் இன்று நடப்பதென்னவென்றால், ஒவ்வொரு நடவடிக்கையிலும் பாரபட்சம் காட்டப்படுகிறது; தயக்கம் காட்டப்படுகிறது.

ஆகவே கம்யூனிஸ்ட் கட்சி கீழ்க்காணும் உடனடி கோரிக்கைகளை முன்வைக்கிறது:—

1. உடனடியாக எல்லா அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும்; பதினைந்து வருஷங்களுக்குமேலாக வங்க பயங்கர இயக்கக் கைதிகள் சிறைகளில் கழித்துவிட்டனர். பலாத்கார குற்றத்துக்காக தண்டிக்கப்பட்டவர்கள் என்று இன்னும் பலர் சிறையிலேயே வாடுகின்றனர். அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

2. தரைப்படை, ஆகாயப்படை, கடற்படை ஆகியவற்றில் சமீபகாலத்தில் நடந்த வேலைநிறுத்தங்களுக்காக சிறையிலடைக்கப்பட்ட சகல இந்தியர்களையும் உடனடியாக விடுவிக்கவேண்டும்.

3. இன்னும் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இந்திய தேசீய ராணுவத்தினர் அனைவரையும் விடுவிப்பதுடன், கடந்த ஆறு வரு

ஷங்களாக அரசியல் கிளர்ச்சிக்காக சிறைபிலடைக்கப்பட்டிருக்கும் இந்திய ராணுவத்தினர் அனைவரையும் விடுவிக்கவேண்டும்.

4. இன்னும் சட்டவிரோதமாக விருக்கும் சகல அரசியல் கட்சிகளின் மீதுள்ள தடைகளையும், காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி, பார்வார்ட்பிளாக் முதலியவற்றின் மீதுள்ள தடைகளையும், உடனடியாக ரத்து செய்யவேண்டும்.

5. இந்திய மக்கள் அனைவருக்கும் உடனடியாக பரிபூர்ண பிரஜா உரிமைகள் வழங்கப்படவேண்டும். அரசியல்வாதிகளை கைதுசெய்வது, பத்திரிகைகளிடம் ஜாமீன் கேட்பது முதலிய நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும். குறிப்பாக இந்த நடவடிக்கைகள் கம்யூனிஸ்ட் கட்சி பத்திரிகைகள் அங்கத்தினர்கள்மீது ஏவப்படுகிறது.

## 8. முடிவு

இந்திய மக்களுக்கும் பிரிட்டிஷ் மக்களுக்கும் சரிநிகர் சமமான அந்தஸ்து அடிப்படையில், நிரந்தரமான ஜனநாயக சமரஸம் ஏற்படுத்துவது உலக சமாதானத்துக்கும், உலக பந்தோபஸ்துக்கும், உலக மக்களிடையே பரஸ்பர நல்லெண்ணம் நில்வுவதற்கும் அத்தியாவசியம். இத்தகைய சமரஸத்தை சாத்தியமாக்க வேண்டுமென்றால், பிரிட்டிஷ் சர்க்கார் இந்த யாதாஸ்தில் கண்ட அடிப்படையில் நடந்து கொண்டால்தான் முடியுமென்று கம்யூனிஸ்ட் கட்சி அபிப்பிராயப்படுகிறது. இந்தியர்களுக்கிடையிலுள்ள வித்தியாசங்களை பயன்படுத்திக்கொண்டு, யதேச்சாதிகார முறையில் தான்தோன்றித்தனமாக இந்தியாவை துண்டாட முயன்று, பிரிட்டிஷ் ஆதிக்கம் நீடிப்பதற்காக சமஸ்தானாதிபதிகளுக்கு உயிர் அளிக்க முயற்சித்தால், இந்திய மகா ஜனங்கள் தங்கள் முழுபலத்துடன் அம்முயற்சிகளை எதிர்ப்பார்கள்.

58761

V2:51
N46

# கடைசி செய்தி

இப்புத்தகம் பிரசுரிக்கப்படும் தருணத்தில் சிம்லா மகாநாடு முறிந்துவிட்டது என்ற செய்தி வந்துவிட்டது. இந்த நிலையில் இப் பிரசுரத்திலுள்ள கட்டுரைகளுக்கு அதிக முக்கியத்வம் உண்டு. கம்யூனிஸ்டுகளின் தீர்க்க தரிசனத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.